Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 347

செவ்வாய்க்கிழமை
08 நவம்பர் 2022

ஐப்பசி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ.50

## எதிர்வரும் திங்கள்வரை வடக்கில் மழை தொடரும்

யாழ்ப்பாணம், நவ. 8
எதிர்வரும் திங்கட்கிழமை வரையில் வடக்கு மாகாணத்தில் மழை தொடரும் என்றும், வங்காள விரிகுடாவில் உருவாகும் தாழமுக்கம் மற்றும் அதன் நகர்வு தொடர்பில் நாளையே உறுதியாகக் கூறமுடியும் எனவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார்.
மத்திய வங்காள விரிகுடாவில் இன்று இரவு தாழமுக்கம் ஒன்றின் ஆரம்ப நிலை உருவாகும். நாளை அது வலுப்பெறும். இதனால் 10 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி 11 ➤

### யாழ்ப்பாணத்தவர்கள் உட்பட

## 306 தமிழர்களுடன் பயணித்த படகு நடுக்கடலில் நீண்ட நேரம் தத்தளிப்பு

### நேற்றிரவு வியட்நாமில் கரைசேர்ந்தனர்

யாழ்ப்பாணம், நவ. 8
கனடாவுக்குள் புகலிடம் தேடி இலங்கையில் இருந்து சென்ற தமிழ் அகதிகள் 306 பேர் நடுக்கடலில் நீண்டநேரமாகத் தத்தளித்துக் கொண்டு உயிருக்கு போராடிய நிலையில் பிலிப்பைன்ஸ் கடற்படையினர் படகுடன் தொடர்பு கொண்டு அவர்களை மீட்பதற்கான முயற்சிகளை 11 ➤

### புலிகளின் பெயரைப் பயன்படுத்தாமல்

# உயிரிழந்தவர்களை நினைவுகூர எந்தவொரு தடையுமில்லை!!!



### படையினரையும் சீண்ட வேண்டாமாம் சொல்கிறார் நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, நவம்பர் 8
போரில் இறந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நினைவேந்த அவர்களின் உறவுகளுக்கு முழு உரிமை உண்டு. இதில் அரசியல் தலையீடுகள், பாதுகாப்புத் தரப்பினரின் தலையீடுகள் இருக்கவே கூடாது – இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார். மாவீரர் வாரத்தை கடைப்பிடிப்பதற்கான ஏற்பாடுகள் தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 11 ➤

## ஹெரோய்னுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், நவ. 8
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகில் 200 மில்லி கிராம் உயிர்கொல்லி ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 22 வயது இளைஞன் ஒருவன் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளான். (அ-ஒ.27)

## போதையைக் கட்டுப்படுத்த வீதிக்கு வருகிறது இராணுவம்

### இன்றுமுதல் புதிய சோதனைச் சாவடிகள்

யாழ்ப்பாணம், நவ. 8
யாழ்ப்பாணத்தில் உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் முயற்சியாக இன்றிலிருந்து இராணுவத்தினரால் முக்கியமான இடங்களில் சோதனைச் சாவடி 11 ➤

## வலி. வடக்கு காணி ஆக்கிரமிப்பு அமெரிக்க செனட் குழு ஆராய்வு

யாழ்ப்பாணம், நவ. 8
வலி. வடக்கில் பாதுகாப்புத் தரப்பினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் அமெரிக்க செனட் பிரதிநிதிகள் குழு நேற்று ஆராய்ந்துள்ளது.
யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள செனட் குழுவினர், வலி. வடக்கு பிரதேசசபையின் தவிசாளர் சோ.சுகிர்தனை பிரதேச 11 ➤

## 53 வயதானவரை மணம் செய்ய சிறுமிக்கு பெற்றோர் வற்புறுத்தல்

யாழ்ப்பாணம், நவ. 8
நெதர்லாந்திலுள்ள 53 வயது நபரொருவரைத் திருமணம் செய்யுமாறு பெற்றோர் வற்புறுத்தினர் என 15 வயதுச் சிறுமியொருவர் வாக்குமூலம் வழங்கியுள்ளார். இந்த நிலையில் குறித்த சிறுமியை தாக்கிய குற்றச்சாட்டில் அவரது பெற்றோரை அச்சு 11 ➤

## யாழ்.மருத்துவமனை வீதியூடாக பேருந்துகள் பயணிக்கத் தடை

### யாழ். மாநகர மேயர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 8
அனைத்து தனியார் பேருந்துகளும் புதிதாக அமைக்கப்பட்ட தூர சேவைக்கான பேருந்து நிலையத்திலிருந்தே இன்று முதல் சேவையில் ஈடுபடவுள்ளன. அதே 12 ➤

### சிறுமி குளிக்கும் போது

## காணொலி எடுத்த இளைஞர் மக்களால் 'நையப்புடைப்பு'

யாழ்ப்பாணம், நவ. 8
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 17 வயதுச் சிறுமி குளிக்கும்போது அதை மறைந்திருந்து காணொலி எடுத்த 21 வயதான 12 ➤

### காதல் விவகாரம்:

## 23 வயது பெண்ணைக் கடத்த 63 வயது முதியவர் முயற்சி

மூவர் விளக்கமறியலில்

முல்லைத்தீவு, நவ. 8
முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் திருமணமான 23 வய 12 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் பிரச்சினை ரூ. 2 லட்சம் இழப்பீடல்ல!

## நீதி அமைச்சரின் கருத்துக்களுக்கு சட்டத்தரணி கே.வி.தவராசா பதிலடி

**கொழும்பு, நவ. 8**

**தமிழர்களுக்கு இப்போதுள்ள பிரச்சினை காணாமல் ஆக்கப்பட்டவர்கள் திரும்பி வரமாட்டார்கள் எனவே இழப்பீட்டைப் பெற்றுக்கொண்டு அமைதியாக இருத்தல் பற்றியதல்ல. அது நீதி பற்றியதும் பொறுப்புக் கூறல் பற்றியதுமாகும். எம்மால் கையளிக்கப்பட்ட நபர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் கொல்லப்பட்டார்களா? அப்படியென்றால் யாரால் கொல்லப்பட்டார்கள்? யாருடைய உத்தரவின் பேரில் கொல்லப்பட்டார்கள்? இவ்வாறான கேள்விகளுக்கு நாங்கள் பதில்தேட வேண்டியிருக்கின்றது.**

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்ற கையோடு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அதிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அவர்களது உறவுகளால் நேரடியாக இராணுவத்திடம் கையளிக்கப்பட்டவர்கள். மேற்படி நபர்கள் பாதுகாப்புத் தரப்பினரிடம் கையளிக்கப்பட்டமைக்கு சாட்சிகள் இருக்கின்றன.

2015ஆம் ஆண்டில் மகிந்த அரசு தோற்கடிக்கப்பட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் நல்லாட்சி அரசாங்கம் உருவாக்கப்பட்டபோது அப்போதைய அரசாங்கத்தில் நீதியமைச்சராக இருந்த விஜயதாஸ ராஜபக்சவே இப்போதும் நீதி அமைச்சராக இருக்கின்றார். அப்படியெனில், ஆட்சிமாற்றம் ஏற்பட்ட போது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிருடன் இருந்தார்களா? நல்லாட்சி அரசிடம் பாரம் கொடுக்கப்பட்டார்களா? இல்லையா? என்ற விடயத்தை அப்போது நீதி அமைச்சராகயிருந்த விஜயதாஸ ராஜபக்ச அறிந்திருக்கவில்லையா? உள்ளிட்ட கேள்விகளை நீதி அமைச்சரிடம் கேட்க வேண்டியிருக்கின்றது.

2022ஆம் ஆண்டு யாரும் உயிருடன் இருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை எனவே இரண்டு லட்சம் ரூபா இழப்பீட்டைப் பெற்றுக் கொண்டு இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர குறிப்பிட்ட தரப்பினர் முன்வர வேண்டும் என்று விஜயதாஸ தற்போது அறிவித்துள்ளார். ஆனால் 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசு காலத்தில் நீதியமைச்சராகயிருந்த இவர், அக்காலத்தில் இப்படியொரு கூற்றை முன்வைக்க முடியாமல் போனதென்றால் அக்காலத்தில் பாதுகாப்புத் தரப்பிடம் கையளிக்கப்பட்டவர்கள் உயிருடன் இருந்தார்களா? என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. இப்போது துணிந்து அவர் வெளிப்படுத்தியிருக்கும் கூற்று யாரும் உயிரோடு இருக்க வாய்ப்பில்லை என்று இறுதிசெய்வதாகவே இருக்கின்றது. எனவேதான் இது தொடர்பில் நீதியமைச்சரை நேரடியாகக் கேள்விக்குட்படுத்த வேண்டியிருக்கின்றது.

தமிழர்களுக்கு இப்போதுள்ள பிரச்சினை காணாமல் ஆக்கப்பட்டவர்கள் திரும்பி வரமாட்டார்கள் எனவே இழப்பீட்டைப் பெற்றுக்கொண்டு அமைதியாக இருத்தல் பற்றியதல்ல. அது நீதி பற்றியதும் பொறுப்புக் கூறல் பற்றியதுமாகும். எம்மால் கையளிக்கப்பட்ட நபர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் கொல்லப்பட்டார்களா? அப்படியென்றால் யாரால் கொல்லப்பட்டார்கள்? யாருடைய உத்தரவின் பேரில் கொல்லப்பட்டார்கள்? இவ்வாறான கேள்விகளுக்கு நாங்கள் பதில்தேட வேண்டியிருக்கின்றது.

நீதியின் கட்டமைப்பைச் சிதைத்து ஆயுதவழி தீர்வை இராணுவமுறையில் அமுல்படுத்திய நபர்களுக்கு எதிராகச் சட்டம் என்னவிதமான நடவடிக்கையை மேற்கொள்ளப்போகின்றது? இத்தகைய கேள்விகளுக்கு இந்தச்செயற்பாட்டுக்கு பதில் அளிக்கப் பொறுப்புவாய்ந்த நபர் எத்தகைய பதிலை அளிக்கப்போகின்றார் என்பதில்தான் தொலைந்துபோன தமது உறவுகளுக்காகத் தொடர் போராட்டத்தில் ஈடுபடுகின்ற மக்கள் தமது கவனத்தைக் குவித்து வைத்துள்ளார்கள். இவர்களின் இலக்கு இழப்பீடு பற்றியதல்ல. பொறுப்பான பதில் பற்றியது என்பதை நீதியமைச்சர் விளங்கிக் கொள்ள வேண்டும். காலம் தாழ்த்தியேனும் அந்தப்பதிலை பொறுப்புடன் வழங்க நீதியமைச்சர் தயாராக இருக்கின்றாரா?

தமிழர் அரசியல் தரப்பு கைக்கொள்ளும் நீண்ட மௌனம் இந்த விடயத்தில் எப்போது வெளிப்படையாகக் கலையும் என்ற கேள்வியுடன் அந்த மௌனத்துக்குப் பின்னால் தொக்கி நிற்கும் தமிழ்த்தேசியத்தை நீர்த்துப் போகச் செய்யும் நபர்கள் குறித்தும் இனித் தமிழ் மக்கள் அவதானங்கொள்ள வேண்டிய சூழல் உருவாகி இருக்கின்றது.

எனவே இழப்பீடுபற்றிப் பேசாது நீதியின் மடியில் தக்க பதிலைச் சமர்ப்பிக்குமாறு எல்லாவிதமான எதிர்க்கரங்களுக்கு எதிராகவும் தொடர்ந்து போராடுவோம் - என்றுள்ளது. (ம)

# படுகொலையாளிகளுக்கு அரசின் தண்டனை என்ன?

## கேள்வி எழுப்புகின்றார் சிறிநேசன்

கொழும்பு, நவ.8

காணாமல் ஆக்கப்பட்டோர் கொல்லப்பட்டு விட்டார்கள் என்பதை அரசு சார்ந்தவர்களின் வெவ்வேறான கருத்துக்கள் நம்ப வைக்கின்றன. அவ்வாறானால் படுகொலையாளிகளுக்கு என்ன தண்டனையை இந்த அரசு வழங்கப்போகின்றது? இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமது உறவுகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதாகத் தமிழ் உறவினர்கள் 13 ஆண்டுகளாக ஏங்கித் தவிக்கின்றனர். 2 ஆயிரத்து 50 நாள்களுக்கும் அதிகமாக தெருக்கள் மற்றும் பொதுவான இடங்களில் நின்று கண்ணீரும் கம்பலையுமாய் போராடி வருகின்றனர். உள்நாட்டிலும், உலக அரங்கிலும் அந்த உறவுகளின் குரல்கள் ஒலிக்கின்றன. ஆனால், அரச அதிகார வர்க்கத்தினர் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக பொறுப்பற்ற விதத்திலும், மலினமாகவும், நகைப்பாகவும், நையாண்டியாகவும் பல கருத்துக்களை முன் வைத்துள்ளனர்.

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, 'காணாமல் ஆக்கப்பட்ட எவரும் உயிரோடு இருப்பதற்கான சாத்தியம் இல்லை' என்றும், இராணுவத்தினர் 'போரின் போது எவரும் எம்மிடம் சரணடையவில்லை' என்றும், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலக விசாரணை அதிகாரி மகேஷ், 'இராணுவத்தால் எவரும் காணாமல் ஆக்கப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டிருந்தால் அவர்கள் விடுதலைப்புலிகளால்தான் காணாமல் ஆகியிருப்பார்கள். காணாமல்போனவர்கள் என்போர் சிலர் வெளிநாடுகளில் உள்ளனர்' என்றும், விமல் வீரவன்ஸ (அமைச்சராக இருந்த போது) - 'காணாமல்போனவர்களை மண்ணைத் தோண்டிப் பாருங்கள்', என்றும், கோத்தாபய ராஜபக்ச (ஜனாதிபதியாக இருந்த போது), 'காணாமல் ஆக்கப்பட்டவர்களை மறந்து விடுங்கள்' என்றும் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, இறுதிப் போரின் போது களத்தில் நின்ற மேஜர் ஹசித சிறிவர்த்தன வெளிநாட்டில் இருந்தவாறு சில தகவல்களை வெளியிட்டுள்ளார் என்று அறியப்படுகின்றது. வெள்ளைக்கொடியுடன் விடுதலைப்புலிகள் தானறியும் வகையில் சரணடைந்தார்கள் என்றும், அவர்கள் தன்பார்வையில் இருந்தார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். பின்னர் முன்னாள் பாதுகாப்புச் செயலாளரின் (கோத்தாபய ராஜபக்ச) கட்டளைக்கு அமைவாகத் தன்னை அகற்றிவிட்டு பொறுப்பேற்ற ஒருவரின் பணிப்பின் பேரில் அவர்கள் அனைவரும் சுட்டுக்கொல்லப்பட்டு விட்டார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் காணாமல் ஆக்கப்பட்டவர்களில் கடத்தப்பட்டவர்கள், கைதுசெய்யப்பட்டவர்கள், சரணடைந்தவர்கள், உறவினர்களால் ஒப்படைக்கப்பட்டவர்கள் என்று நான்கு வகையினர் காணப்பட்டனர். இவர்களில் உறவினர்களால் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கான வலிதான சாட்சியங்கள் உறவினர்களாக உள்ளனர். சரணடைந்தவர்களுக்கும் மேஜர் சிறிவர்த்தன போன்றவர்கள் சாட்சியமாக உள்ளனர்.

இப்படியெல்லாம் இருக்க, அரச தரப்பினரின் கருத்துக்கள் ஒரேவிதமாக இல்லை. அவர்களுள் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கருத்து முக்கியமானது. காணாமல் ஆக்கப்பட்டவர்களை மறந்துவிடுங்கள் என்று கூறுகின்றார்.

மனிதர்களைத் தாக்கும் காட்டு விலங்குகளுக்கே கருணை காட்டும் நாட்டுத் தலைவர்கள், தமிழர்கள் விடயத்தில் காட்டும் மெத்தனப்போக்கு அடிப்படைவாத வன்மத்தின் கொடிய போக்கைக் காட்டுகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டோர் கொல்லப்பட்டு விட்டார்கள் என்பதையும் நம்ப வைக்கின்றது. எனவே, கொலையாளிகளுக்கு என்ன தண்டனையை இந்த அரசு வழங்கப்போகின்றது? - என்றுள்ளது. (எ-22)



## யாழ். போதனாவில் மாஸ்க் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், நவ 8

யாழ். போதனா மருத்துவமனையில் 'மாஸ்க்'குக்கு மிகப்பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்ற தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், மாஸ்க்கை அன்பளிப்பாகப் பெற்றுத்தர உதவுமாறு நலன்விரும்பிகளிடம் மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா கோரிக்கை விடுத்துள்ளார். (ய)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மீன்களின் விலை சடுதியாக வீழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ. 8

வடமாகாணத்தின் பல மீன் சந்தைகளில் மீன்களின் விலைகளில் சடுதியாக வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மீன்களின் வரத்து அதிகரித்திருப்பதன் காரணமாகவே இந்த விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம-17)

## சங்கிலி அறுப்பு ஒருவர் கைது

யாழ்ப்பாணம், நவ.8

வழிப்பறிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் பல்வேறு குற்றச் சம்பவங்கள் தொடர்பான வழக்குகளுடன் தொடர்புடையவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மாதம் அல்லாரைச் சந்தியில் பெண் ஒருவரின் ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் தொடர்பில் ஒருவர் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில், சந்தேகநபர் தலைமறைவாகியிருந்தார். இந்தநிலையில் நேற்றுமுன்தினம் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-125)

## சைக்கிள் திருட்டு: ஒருவர் கைதானார்

யாழ்ப்பாணம், நவ. 8

சைக்கிள் திருட்டில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்த இளைஞர் ஒருவர் ஆனைக்கோட்டை பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.


சுன்னாகம் நகர்ப்பகுதியில் அண்மைக் காலமாக சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்திருந்தன.

இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தீவிர விசாரணையில் ஈடுபட்ட பொலிஸார் ஆனைக்கோட்டை பகுதியில் நேற்று திங்கட்கிழமை 20 வயதான இளைஞரை கைது செய்தனர். அவரிடமிருந்து 4 சைக்கிள்களும் மீட்கப்பட்டன.

மேலதிக விசாரணையில் சந்தேகநபர் ஏற்கனவே மூன்று திருட்டுக்களில் தொடர்புடையவர் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபரை யாழ். நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தி அவர் மீது வழக்கு தொடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ-125)



### சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட

# கடலட்டைப் பண்ணைகளை அகற்றுவதில் அசமந்தம்

### இலவன்குடா மக்கள் குற்றச்சாட்டு

**மன்னார், நவ. 8**

**கிராஞ்சி, இலவன்குடாவில் அமைக்கப்பட்ட கடலட்டைப் பண்ணைகள் சட்டவிரோதமானவை என்பதை ஏற்றுக்கொண்ட திணைக்களங்கள், அவற்றை அகற்றுவதற்கு இன்னமும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று பிரதேச மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.**



இந்தக் கடலட்டைப் பண்ணைகளால் கரையோர மீன்பிடியை நம்பி வாழும் குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழக்க நேரிடும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

கடலட்டைப் பண்ணைகளை அகற்ற வேண்டும் என்று தெரிவித்து பிரதேச மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:-

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இரண்டாம் கட்ட விசாரணையில் இந்தக் கடலட்டைப் பண்ணைகள் சட்டவிரோதமானவை என்பதை திணைக்களங்கள் ஏற்றுக்கொண்டன.

ஆனால், உயிரியல் வள அபிவிருத்தி மற்றும் தேசிய நீர் உயிரியல் ஆராய்ச்சி நிறுவனங்கள் என்பன அந்தப் பண்ணைகளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

கடலட்டைப் பண்ணைகளால் மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடற்றொழிலாளர் சங்கம், கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம், பிராந்திய நீர்வாழ் உயிரின வளர்ப்பு விரிவாக்கல் காரியாலயம் ஆகியோருக்கு பலமுறை கடிதம் மூலமாக அறிவித்திருந்தோம். ஆனால் இதற்கான சரியான தீர்வு கிடைக்கவில்லை. கடற்றொழில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து பாரம்பரிய தொழில் புரியும் இடங்களுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் பண்ணைகளை அமைத்து எமது இடங்களை எம்மிடம் தர வேண்டும் என்று கோருகின்றோம் - என்றனர். (எ-213)

## உடைமையில் கசிப்பு: சந்தேகநபர் கைது

யாழ்ப்பாணம், நவ.8

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் பகுதியில் கசிப்பினை உடைமையில் வைத்திருந்த ஒருவரை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பகுதியில் ஒருவர் கசிப்பினை உடைமையில் வைத்திருக்கிறார் என புலனாய்வுத் தகவல் சுன்னாகம் பொலிஸாருக்குக் கிடைத்தது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த சுன்னாகம் பொலிஸார் ஒன்றரை லீற்றர் கசிப்புடன் 40 வயதான ஒருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தி வழக்குத் தாக்கல் செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

## வழிப்பறியில் ஈடுபட்டாரென இளைஞர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ.8

சுன்னாகம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட உடுவில் பகுதியில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டார். உடுவில் பகுதியில் கடந்த சில நாள்களுக்கு முன்பு பெண்ணொருவரிடம் 3 லட்சம் ரூபா பெறுமதியான சங்கிலி வழிப்பறி செய்யப்பட்டது.

இது தொடர்பில் தீவிர விசாரணையை முன்னெடுத்த சுன்னாகம் பொலிஸார் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட இளவாலைப் பகுதியைச் சேர்ந்த 19 வயது இளைஞரை கைது செய்தனர்.

சந்தேகநபரை யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தி அவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)

## சவாரி மாட்டை இறைச்சியாக்கிய இரண்டு பேர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், நவ.8

சவாரி மாட்டைக் களவாடி இறைச்சியாக்கிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டை தெற்கு முதலிகோயில் பகுதியில் சட்டவிரோதமாக மாடு இறைச்சியாக்கப்படுகின்றது என்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அராலி மேற்கில் சவாரிக்குப் பயன்படுத்தப்படும் மாடு ஒன்று களவாடப்பட்டிருந்தது. அந்தமாடே இறைச்சியாக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-27-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் குற்றச்சாட்டு: குணதிலகவுக்கு தடை!

**யாழ்ப்பாணம், நவ. 8**

**பாலியல் குற்றச்சாட்டில் சிட்னி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நட்சத்திர வீரர் தனுஸ்க குணதிலக, அனைத்துவிதமான கிரிக்கெட் ஆட்டங்களிலும் விளையாடுவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை தடைவித்துள்ளது.**



அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான இலங்கை அணியில் இடம்பெற்றிருந்த குணதிலக, இணையச் செயலி ஒன்றின் மூலம் அறிமுகமான 29 வயதான யுவதியொருவரிடம் பாலியல் குற்றங்களில் ஈடுபட்டார் என்று அந்த யுவதி முன்வைத்த குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் நான்கு பிரிவுகளில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் சிட்னிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட குணதிலக, நேற்று சிட்னி நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது அவருக்குப் பிணை வழங்க சிட்னி நீதிமன்றம் மறுத்துள்ளது. இதையடுத்து தனுஸ்க குணதிலக மீதான ஒழுக்காற்று நடவடிக்கைகளை இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இது தொடர்பில் வெளியான அறிவிப்பிலேயே குணதிலக இலங்கை கிரிக்கெட் அணியில் இருந்து நீக்கப்படுவதுடன், அவர் அனைத்து விதமான ஆட்டங்களில் விளையாடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால், சர்வதேச ஆட்டங்களில் மட்டுமல்லாமல் உள்ளூர் ஆட்டங்கள், லீக் ஆட்டங்கள், முதல்தர ஆட்டங்கள் என்பவற்றில் விளையாடுவதற்கும் குணதிலகவுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம)

## வீரர்களின் குற்றத்துக்கு அவர்கள்தான் பொறுப்பு

*மஹேல தெரிவிப்பு*

கொழும்பு, நவ. 8

இலங்கை கிரிக்கட் அணியின் வீரர்கள் தாம் இழைக்கும் குற்றங்களுக்கு தாமே பொறுப்புக் கூறவேண்டும் என இலங்கை கிரிக்கட் அணியின் பயிற்றுவிப்பு ஆலோசகர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார்.

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்பதற்காக அவுஸ்திரேலியா சென்ற இலங்கை குழாம் நேற்றுமுன்தினம் மீண்டும் நாட்டை வந்தடைந்துள்ளது. இதன்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மஹேல ஜெயவர்த்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் நட்சத்திர வீரர் தனுஸ்க குணதிலக, அவுஸ்திரேலியாவில் யுவதியொருவர் வழங்கிய பாலியல் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ள பின்னணியிலேயே மஹேல இவ்வாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கந்தகாடு முகாமில் பதற்றம் தணிந்தது

*தப்பியோடியோரை தேடும் பணி தீவிரம்*

கொழும்பு, நவ.8

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் ஏற்பட்டிருந்த பதற்ற நிலை நேற்று மதியம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தாலும் அங்கு தொடர்ந்தும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தப்பியோடியவர்களைக் கைது செய்வதற்காகத் தேடுதல் வேட்டையும் தீவிரமாக இடம்பெற்றுவருகின்றது.

கந்தகாடு தடுப்பு முகாமில் புனர்வாழ்வு பெற்றுவரும் இருவருக்கிடையில் நேற்றுமுன்தினம் மோதல் ஏற்பட்டுள்ளது. பின்னர் அது இரு குழுக்களுக்கிடையிலான மோதலாக மாறியுள்ளது. இதனைக் கட்டுப்படுத்தச் சென்ற பாதுகாப்பு அதிகாரிகள்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சொத்துகளுக்கும் சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. இந்தநிலையில் தடுப்பு முகாமின் ஆயுதக் களஞ்சியசாலைக்குள் நுழைவதற்கு சிலர் முற்பட்டுள்ளனர். அதைக் கட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்பில் இருந்த இராணுவத்தினர் வானத்தை நோக்கி சூடு நடத்தினர். இதனால் அங்கு பதற்ற நிலை உருவாகியது.

ஒரு இராணுவத்தினரும், புனர்வாழ்வு பெற்ற நால்வரும் சம்பவத்தில் காயமடைந்துள்ளனர். அவர்கள் தற்போது பொலநறுவை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

சம்பவத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு தப்பியோடியவர்களைக் கைது செய்வதற்கான நடடிக்கையும் ஆரம்பமாகியுள்ளது. பாதுகாப்பு அதிகாரிகள்மீது தாக்குதல் நடத்தியோர் மற்றும் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தோரை கைது செய்வதற்கான விசாரணையும் ஆரம்பமாகியுள்ளது. கடந்த ஜூன் 29 ஆம் திகதியும் இந்த முகாமில் மோதல் ஏற்பட்டது. அதில் ஒருவர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-44)

## இளங்கலை மாணவர்களுக்கான 2ஆவது ஆய்வரங்கு வியாழன்று

யாழ்ப்பாணம், நவ. 8

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடம் 'எஹெட்' செயற்றிட்டத்தின் நிதி அனுசரணையுடன் நடத்தும் 'இளங்கலை மாணவர்களுக்கான இரண்டாவது ஆய்வரங்கு' நாளைமறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

முதலாவது மாநாடு கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி 'சமத்துவம், சமநீதி மற்றும் அபிவிருத்திக்கான மனிதப்பண்பியலும் சமூக விஞ்ஞானங்களும்' எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதனுடைய நீட்சியாக நாளைமறுதினம் வியாழக்கிழமை இரண்டாவது ஆய்வரங்கு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தில் நடைபெறவுள்ள ஆய்வரங்கானது, 'பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடிகளிடையே வழமைக்குத் திரும்புதலும் மீண்டெழும் தன்மையைக் கட்டியெழுப்புதலும்' எனும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ளது.

கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் கே.சுதாகர் தலைமையில் நடைபெறவுள்ள ஆய்வரங்கின் ஆரம்ப நிகழ்வில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். திறவுரையைக் கொழும்புப் பல்கலைக்கழகப் பொருளியல்துறை பேராசிரியர் கோ.அமிர்தலிங்கம் 'இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி' எனும் கருப்பொருளில் மேற்கொள்ளவுள்ளார்.

ஆய்வு மாநாட்டுக்கென யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் இளங்கலை மாணவர்களிடமிருந்து தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலமைந்த ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டு, அவற்றிலிருந்து 125 ஆய்வுக் கட்டுரைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

தெரிவுசெய்யப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட எட்டு ஆய்வுத் தடங்களில் ஆய்வாளர்களால் அளிக்கை செய்யப்படவுள்ளன. இந்த ஆய்வுத் தடங்களை துறைசார் பேராசிரியர்கள் தலைமையேற்று நடத்தவுள்ளனர். ஆய்வரங்கில் பங்குபற்றி பயன்பெற வேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடம், ஆர்வலர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது. (எ-20)

*மன்னார் மாவட்டத்தில்*

## கூட்டுறவுச் சமாச கட்டடம் இடிந்து விழும் நிலையில்

*துரித நடவடிக்கை எடுப்பதாக பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு*

மன்னார் நவ.8

மன்னார் பிரதான பால நுழைவாயில் பகுதியில் மன்னார் நீதிமன்றத்துக்கு அருகில் அமைந்துள்ள மன்னார் மாவட்டக் கூட்டுறவுச் சமாசக் கட்டடம் பாழடைந்து, இடிந்து விழும் நிலையில் காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த கட்டடம் தொடர்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் பல தடவை சுட்டிக்காட்டப்பட்டபோதும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் இருந்தது. இந்தநிலையில் மன்னாருக்கு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வருகைதந்த வீடமைப்புத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிடம் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் மற்றும் மன்னார் மாவட்டச் செயலாளர் திருமதி அ.ஸ்ரான்லி டி மெல் ஆகியோர் குறித்த கட்டடம் தொடர்பில் தெரிவித்தனர். இதையடுத்து, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, குறித்த கட்டடத்தை பார்வையிட்டதுடன் விசாரணைகளை மேற்கொண்டு துரித நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகத் தெரிவித்துள்ளார். (ய-213)

## மக்களின் எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் முல்லை. வளங்கள் சுரண்டப்படுகின்றன

*முன்னாள் விவசாய அமைச்சர் தகவல்*

முல்லைத்தீவு, நவ. 8

முல்லைத்தீவு மாவட்ட வளங்கள் சுரண்டப்படுவதை வன்மையாக எதிர்க்கின்றோம். எதிர்ப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டாலும் தமிழர்களின் வளங்கள் இந்தப் பகுதியில் தொடர்ந்து சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று முன்னாள் மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் தெரிவித்தார்.

துணுக்காய், மல்லாவி யோக புரநாதர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழ்த் தேசியக் [illegible] துணுக்காய் பிர[illegible] தேச இளைஞர் அணி நிர்வாகத் தெரிவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே வடமாகாண சபை முன்னாள் அமைச்சர் சிவநேசன் பவன் இவ்வாறு கருத்துரைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள வளங்கள் சுரண்டப்படும், அழிக்கப்படும் சம்பவங்களும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறன. [illegible] காணிகள் அபகரிக்கப்படுவதும் தமிழர்களின் பூர்வீக வழிபாட்டு தலங்கள் பௌத்த மயமாக்கப்படுவதும் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.

இவ்வாறு தமிழர்களின் பூர்வீக நிலங்களை சிங்கள பௌத்த பேரினவாதம் சட்டவிரோதமாக அபகரிப்பதை எமது முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்கள் பார்த்துக் கொண்டு இருக்கக்கூடாது. முல்லை மாவட்ட இளைஞர்கள் சுயமாக முன்வந்து எமது மாவட்டத்தையும் மாவட்டத்தில் உள்ள வளங்களையும் பாதுகாக்க பழகிக்கொள்ள வேண்டும் - என்றார். (ம-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# மாறியும் மாறாமலும்!

மன்னார் – ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானப் பணிகளில் ஈடுபட்ட தன்னார்வலர்களைக் கடுமையாக விசாரித்துள்ள பொலிஸார், மாவீரர் நாளை நினைவுகூர்ந்தால் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று எச்சரிக்கையும் விடுத்துள்ளனர். பொலிஸாரின் இந்த அராஜகச் செயல் மன்னாரில் மட்டும் இடம்பெறவில்லை. வடக்கின் பல பகுதிகளிலும் உள்ள துயிலுமில்லங்களில் இத்தகைய எச்சரிப்புகள் தாராளமாக இடம்பெறுகின்றன. துயிலுமில்லங்களில் சிரமதானப் பணியில் ஈடுபடும் மாவீரர்களின் பெற்றோரை நோக்கியும், பொதுமக்களை நோக்கியும், தன்னார்வலர்களை நோக்கியும் தாராளமாகவே கட்டவிழ்த்து விடப்படும், இந்த 'அரச படைகளின் கண்காணிப்பு' இனிவரும் நாள்களில் இன்னுமின்னும்தீவிரமாவதோடு, மோசமானவிளைவுகளைக் கொண்டுவருவதற்கான சாத்தியக்கூறுகளும் மிகஅதிகமே.

கார்த்திகை மாதம் மலர்ந்தவுடன் இவ்வாறான அரச கண்காணிப்புக்கள் தமிழர்களின் பகுதிகளில் முளைவிடுவது ராஜபக்சக்களின் அரசாங்கத்தில் வழக்கமானதாக இருந்தது. முற்றுமுழுதாக இராணுவச் சித்தாந்தம் கொண்ட கோத்தாபயவின் ஆட்சியில் இவ்வாறான கண்காணிப்புக்கள், மிரட்டல்கள் இல்லையென்றால்தான் அது செய்தி. ஆனால், மழை ஓய்ந்த பின்னரும் தொடரும் தூவானம் போன்று ரணில் அரசாங்கத்திலும் இந்த படைக் கண்காணிப்பு இருக்கின்றது அரச மிரட்டல்கள் தொடர்கின்றன – அச்சுறுத்தல்கள் புத்துயிர்ப்புப் பெறுகின்றன.

எந்தப் பெரமுன, கோத்தாபயவை அரியணை ஏற்றியதோ அதே பெரமுனதான் ரணிலையும் அரியணை ஏற்றியது. ஆனாலும், ரணிலின் ஆட்சியில் பெரமுனவின் சித்தாந்தங்கள் இருக்காது என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் தெரிவித்தனர். 'பெரமுனவின் குணாம்சங்கள் இல்லாமல் பெரமுனவின் ஆதரவைப்பெற்று ஆட்சியமைப்பதற்குச் சாத்தியமில்லை' என்பதுதான் மனித நேயச் செயற்பாட்டாளர்களினதும் சமூக ஆர்வலர்களினதும் கருத்தாக இருந்தது. இந்தக் கணிப்பு எவ்வளவுதூரம்சரியானது என்பதைத்தான் துயிலுமில்லங்களில் தற்போது இடம்பெறும் அரச அச்சுறுத்தல்கள் கனகச்சிதமாகப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

உயிரிழந்தவர்கள் எவராக இருந்தாலும் அவர்களை அஞ்சலிப்பதென்பது சர்வதேச யாப்புக்களின் அடிப்படையில் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மனித உரிமை. போரில் இறந்தவர்கள் அல்லது கொல்லப்பட்டவர்கள் புலிகளாக இருந்தாலும், அவர்கள் இதே தமிழர் தாயகத்தில் வாழும் மக்களின் பிள்ளைகள், சகோதரர்கள், உறவுகள். ஆதலால் வித்தாகிப்போன வீரமறவர்களான புலிகளை நினைவுகூருவதென்பது இங்குள்ள ஒவ்வொருவரினதும் ஜனநாயக உரிமை. இதை ஜனாதிபதி ரணில், பிரதமர் தினேஷ் குணவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் உள்ளிட்ட முக்கியமான அத்தனைபேரும் ஏற்றுக்கொள்ளவும் செய்தனர். அண்மையில் முன்னெடுக்கப்பட்ட தியாக தீபம் திலீபனின் அஞ்சலிக்காலங்களிலும் இதே கருத்தை அவர்கள் பகிரங்கமாக ஏற்றிருந்தனர். இவ்வாறிருக்கையில் மாவீரர் மாதத்தில் இந்த அடக்குமுறைகளும், கண்காணிப்புக்களும் ரணிலின் ஆட்சியிலும் கட்டவிழ்த்து விடப்படுவதன் அர்த்தம்தான் என்ன?

இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள்தான் நாட்டின் இன்றைய சிதில நிலைக்கு முதன்மைக் காரணம். இதை இன்னமும் அரசாங்கமோ – படையினரோ உணர்ந்தபாடாயில்லை. எவ்வளவுக்கெவ்வளவு தமிழர்களின் மனித உரிமைகள் நசுக்கப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு இந்த நாட்டின் மீட்சிக்கான பாதை தொலைதூரம் சென்றுகொண்டேயிருக்கும். அதேநேரம், இறந்தோரை அஞ்சலிப்பது அனைவருக்கும் இருக்கும் மனித உரிமை என்று ஜனாதிபதியும் பிரதமரும் தெரிவிப்பதானது ஆத்மார்த்தமான கருத்தாகில், அவர்கள் அதற்குரிய ஏதுநிலைகளை நாட்டில் ஏற்படுத்தவும் பாத்திரவாளர்களாகவே இருக்கின்றனர். அஞ்சலிக்க உரிமையுண்டு என்று தெரிவித்தபின்னர் அதற்குரிய சூழலை ஏற்படுத்தாவிடின் அவர்களின் கருத்தால், நிலைப்பாட்டால் யாருக்கு என்ன பயன்?

## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2022



"பூமியிலே மனிதனுடைய சிறந்த நண்பனாக விளங்குவது மரம். இதை நாம் உரிய மதிப்புடனும் சிக்கனமாகவும் பயன்படுத்தும்போது பூமியிலுள்ள மிகச்சிறந்த வளங்களில் ஒன்றாக நாம் அவற்றைக் கொண்டிருப்போம்"

—பிராங்க் லோயிட் றைற் (அமெரிக்க கட்டடக் கலைஞர், எழுத்தாளர்)




# அம்பாந்தோட்டை கடற்பரப்பில் 300 கிலோ ஹெரோய்ன் மீட்பு

*10 சந்தேகநபர்கள் கைது; விசாரணைகள் அதிதீவிரம்*

**கொழும்பு, நவ. 8**

**அம்பாந்தோட்டை கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 300 கிலோகிராம் நிறையுடைய ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.**



நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்ட சிறப்புச் சோதனை நடவடிக்கையின்போதே மேற்படி ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது. போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர், பொலிஸார் மற்றும் கடற்படையினர் இணைந்து இந்த நடவடிக்கையை முன்னெடுத்தனர். போதைப்பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட இரு மீன்பிடிப் படகுகளும் சிறிய ரக படகொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. இதே வேளை, போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 10 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் அம்பாந்தோட்டை பொலிஸாரிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்களிடம் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம)

## இலங்கைப் பணியாளர்கள் தொடர்புபட்ட

# எண்ணெய் திருட்டு தொடர்பில் விசாரிக்கிறது நைஜீரியா அரசு

கொழும்பு, நவ. 8

இலங்கைப் பணியாளர்கள் பலர் தொடர்புடையதாகச் சொல்லப்படும், எண்ணெய் திருட்டுத் தொடர்பில் நைஜீரிய அரசாங்கம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

நைஜீரியாவின் ஏ.கே.பி.ஓ. எண்ணெய் வயலில் பெருமளவு எண்ணெய் திருட்டு இடம்பெற்றுள்ளதாகவும், ஹெரோய்க் எடன் என்ற கப்பலே இந்தத் திருட்டில் ஈடுபட்டுள்ளது என்றும் நைஜீரிய கடற்படை அண்மையில் கண்டுபிடித்தது. இதையடுத்து அந்தக் கப்பல் நைஜீரியாவில் இருந்து தப்பிச் சென்றுள்ளது. அந்தக் கப்பலில் எட்டு இலங்கையர்கள் உள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

அந்தக் கப்பல் தற்போது எங்கு நிலை கொண்டுள்ளது என்பது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ள நைஜீரிய அரசாங்கம், அந்தக் கப்பலை நைஜீரியாவுக்குக் கொண்டுவந்து மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கவும் தீர்மானித்துள்ளது. (ம)

**நாளை** 09.11.2022 புதன்கிழமை ஐப்பசி 23

சுபநேரம் : 04.35 - 06.05
ராகுகாலம்: 12.05 - 01.35

**கார்த்திகை விரதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கராயன் குளத்தின் கீழான நெற்செய்கை அழியும் நிலை!

## விவசாயிகள் கவலை

கிளிநொச்சி, நவ. 8

கிளிநொச்சி- அக்கராயன்குளம் வான்பாய்கின்றபோது அக்கராயன் குளத்தில் இரு மருங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள நெற்செய்கை அழிவடையும் ஆபத்து உள்ளது என்று விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.



இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த மூன்றாண்டுகளாக அக்கராயன் குளத்தின் இருபுறங்களிலும் காணிகள் வழங்கப்பட்டு பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குளத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற ஒழுங்குகள் மற்றும் அறிவுறுத்தல்கள் கொடுக்கப் படாமையால் குளத்தின் இருபுறமும் பொருத்தமற்ற வகையில் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அக்கராயன் குளத்தின் நீர் பரவாமல் அமைக்கப்பட்டிருந்த அணைக்கட்டு தற்போது அழிவடைந்துள்ளது.

இதனால் அக்கராயன்குளம் வான் பாய்கின்றபோது பெருமளவு நீர் வயல் நிலங்களில் ஊடுருவி பயிரழிவுகள் ஏற்படக்கூடிய அபாயம் தோன்றியுள்ளது.

இதுதொடர்பில் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவினர், மாவட்டச் செயலர், நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் முன்வந்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-13)



## இன ஐக்கியம் வேண்டி நாகவிகாரையில் பூசை

யாழ்ப்பாணம், நவ. 8

நாட்டில் இன ஐக்கியமும் சமாதானமும் நிலவ வேண்டி கடந்த சனிக்கிழமை யாழ். நாகவிகாரையில் விசேட பிரித் ஓதும் நிகழ்வும் விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன.

51ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் பலாலி பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜய சுந்தர, பொலிஸ் உயர் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-27,20)



கொடிகாமம், திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலையில் தரம் 5இல் கல்வி பயிலும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிப்பதற்கு ஒரு தொகை நிதி அண்மையில் கையளிக்கப்பட்டுள்ளது. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சமூக மேம்பட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் கழகத்தின் கனடா கிளை உறுப்பினர் செல்வபாலனால் மேற்படி நிதி வழங்கப்பட்டது. (ம-14,159)

## இரு இராணுவ பஸ்கள் ஒன்றுடன் ஒன்று விபத்து

யாழ்ப்பாணம், நவ. 8

கோண்டாவில் இ.போ.ச. சாலை முன்பாக இராணுவத்தினரின் இரு பஸ்கள் நேற்றுமுன்தினம் மதியம் விபத்துக்குள்ளாகியுள்ளன. பலாலியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பஸ்களே விபத்துக்குள்ளாகியுள்ளன. இவை ஒன்றன் பின் ஒன்றாகப் பயணித்த நிலையில், கட்டுப்பாட்டை இழந்து ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக் குள்ளாகின என்று கூறப்படுகின்றது.

சேர். ஜோன் கொத்தலாவ பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்களைச் சுற்றுலா அழைத்துச் சென்ற சமயமே விபத்து நடந்துள்ளது. விபத்தில் எவருக்கும் பாதிப்பில்லை. இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக முறைப்பாடு எதுவும் செய்யப்படவில்லை என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (எ-125)





## முருங்கன் மத்திய கல்லூரியில் மரநடுகைச் செயற்றிட்டம்

மன்னார், நவ. 8

மன்னார் - முருங்கன் மத்திய கல்லூரியில் மரநடுகை செயற்றிட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைமுறைப்படுத்தப்பட்டது.

'மரம் நாட்டுவோம் எதிர்கால சந்ததியைப் பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் ஏற்பாட்டில், வன்னி மண் அறக்கட்டளையின் நெறிப்படுத்தலில் பாடசாலை வளாகத்தில் 100க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.

நிகழ்வில் நானாட்டான் பிரதேசசபைத் தவிசாளர், ஆசிரியர்கள், மாணவர்கள், மன்னார் மாவட்ட வன வளத் திணைக்கள அதிகாரிகள், வன்னிமண் அறக்கட்டளை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ம-14,56)

## விருது வழங்கல்

யாழ்ப்பாணம், நவ. 8

டேவிட் பீரிஸ் வர்த்தகக் குழுமத்தின் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டத்தின் மூலம் பெண்களைப் பலப்படுத்தும் திட்டத்துக்கான விருது வழங்கல், யாழ்ப்பாணம் நோர்த் கேற் ஹொட்டலில் நாளை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பெண்களுக்கான பிரத்தியேகமான தொழில்நுட்பப் பயிற்சித்திட்டமாக இலங்கையில் முதல் தடவையாக இலவசமாக ஆரம்பிக்கப்பட்டு 7ஆவது தொகுதியாக நடத்தப்பட்ட இந்தத் திட்டத்தில் 20 பெண்கள் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (ம-14)

## வாசிப்பு மாத நடமாடும் சேவை

வவுனியா, நவ. 8

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வவுனியா பொதுநூலகத்தால் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும் பாடசாலைகளுக்கு இடையிலான நூலக நடமாடும் சேவையின் முதலாம் நாள் வவுனியா இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலையில் கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் நகர சபையின் செயலாளருமான தெ.ரதீஸ்வரன் கலந்துகொண்டார். (ம-14,402)



அல்லைப்பிட்டி மகா வித்தியாலயத்தில் மாணவ முதல்வர்களுக்குச் சின்னஞ்சூட்டும் விழா அண்மையில் நடைபெற்றது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
19 . 05 . 1927

மறைவு
09 . 10 . 2022

## அமரர் ஆறுப்பிள்ளை பொன்னுச்சாமி

கடந்த (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து எமது இல்லத்திற்கு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் உலகின் பல பாகங்களில் இருந்து தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மூலமாக அனுதாபங்களைப் பகிர்ந்துகொண்டவர்களுக்கும் பதாகைகள் மூலமாக அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றியவர்களுக்கும் இக்கணம் வரை எமது தேவைகளைப் பூர்த்தி செய்து தோளோடு தோள் நின்ற அன்பு உள்ளங்களுக்கும் இவ்வேளையில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியகிரியை நிகழ்வுகள் இன்று (08.11.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்றது.

**"இலட்சுமி வாசம்"**
**குமரகோட்டம், கோண்டாவில்.** **குடும்பத்தினர்**

# நாடாளுமன்ற அலுவல்கள் குழுவின் கூட்டம்

நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் விசேட கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நண்பகல் 12.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்றத்தின் எதிர்கால விவகாரங்கள் குறித்து தீர்மானிக்கப்படவுள்ளது.

இதேவேளை- நாட்டின் தற்போதைய நிலை தொடர்பிலான விவாதமும் இடம்பெறவுள்ளது. இது தொடர்பான யோசனை தேசிய மக்கள் சக்தியால் கொண்டுவரப்படவுள்ளது.

(ஏ-இ)

# மரண அறிவித்தல்



தோற்றம்
03 . 10 . 2010

மறைவு
06 . 11 . 2022

## செல்வி யூ. ஹர்ஷனா

அடப்பன் வீதி. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி யூ. ஹர்ஷனா கடந்த (06.11.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் யூட்தயாபதி. ஜெனற் றொசானி (ஆசிரியர். யா/ கொழும்புத்துறை சென்.ஜோசப் வித்தியாலயம்) தம்பதியரின் அன்பு மகளும். நிறோஜன். ஷஹானன் (மாணவர். யா/ புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும். அந்தோனிப்பிள்ளை. இராசம்மா. புவனேந்திரன். காலஞ்சென்ற மேரி அன்னரத்தினம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும். நிசாபதி. ஜெயபதி. விஜயபதி. றூபபதி. ஜெனற்நிலானி (பிரான்ஸ்) ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (08.11.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**அடப்பன் வீதி, யாழ்ப்பாணம்.** (CS 21675 (3/6) **குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



மலர்வு
01 . 05 . 1941

உதிர்வு
03 . 11 . 2022

## திருமதி மனோரஞ்சிதமலர் பாலசுப்பிரமணியம் (மலர்)

யாழ். வட்டுக்கோட்டை மூளாய் வீதியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, பிரான்ஸ் ஆகிய இடங்களில் வசித்தவருமான திருமதி மனோரஞ்சிதமலர் பாலசுப்பிரமணியம் (மலர்) கடந்த 03.11.2022 வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்றவர்களான சித்தம்பலம் முருகேசு நாகம்மா முருகேசு தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம் (பாலா ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், இரத்தினேஸ்வரி, தவனேஸ்வரி, மகாலிங்கம் மற்றும் புனிதவதி (லண்டன்), மனோகரநாதன் (பாபு, கோண்டாவில்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாந்தா (அவுஸ்ரேலியா), ஜெந்தா (கொழும்பு), ஜெயபிரகாஸ் (சுவிஸ்லாந்து), சுஜாதா (லண்டன்), காலஞ்சென்ற சுனித்தா மற்றும் சுவர்ணக்குமாரி (அமெரிக்கா), அஜினா (ஜேர்மனி), கல்பனா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், வித்தியாசேகரம் (அவுஸ்ரேலியா), காலஞ்சென்ற சிவகுலரத்தினம் மற்றும் ராஜீனி (சுவிஸ்லாந்து), கந்தசுவாமி (லண்டன்), அமரசிங்கி (அமெரிக்கா), ஸ்ரீவிக்கிரமநாராயணன் (சிறி - ஜேர்மனி), பாலேஸ்வரன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் இன்று (08.11.2022) செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணிக்கு வட்டுக்கோட்டை மூளாய் வீதி இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12 .00 மணிக்கு இறுதிக்கிரியைகள் இடம்பெற்று. பிற்பகல் 2.00 மணிக்கு இறுதி யாத்திரை ஆரம்பமாகி பூதவுடல் வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**நடராசா அமரசிங்கி (மருமகன்),**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்,**
**மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.**

தொடர்புகளுக்கு:
**பாபு (சகோதரன்)**
**021 205 3452**
**077 614 1284** (ඊ 38455) (2.6)

# மரண அறிவித்தல்



## சோமசுந்தரம் பரமேஸ்வரி

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் முத்தட்டுமடவீதி, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் பரமேஸ்வரி நேற்று (07.11.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபை அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின்அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கணேசலிங்கம், குகனேஸ்வரன், ஜெகதீஸ்வரன், சிவனேஸ்வரன் மற்றும் சந்திரபாலன் (கனடா), ஜெகதீஸ்வரி (ஜெயந்தி - இலங்கை), ராஜேஸ்வரி (வசந்தி - கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தாட்சாயணி (கனடா), பாலகிருஷ்ணன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சேரன் (கனடா), ஆரூரன் (கனடா), நிருஜன் (கனடா), அனுஜன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :**
**சந்திரபாலன் (மகன்- கனடா)**
**0721724355 (இலங்கை)**
**+ 14164393908,**
**வசந்தி (கனடா) :+ 16479170261**

**முத்தட்டுமடவீதி,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**
(CS 21684 ) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள் தொடர்பான முறைப்பாடுகள் கிடப்பில்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், நவம்பர் 08**

**யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் கல்வி சம்பந்தமாக பல்வேறு மோசடிகள் இடம்பெற்றுவருகின்றன என முறைப்பாடுகள் செய்தும் இது தொடர்பில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படாமல் இழுத்தடிப்புகள் இடம்பெற்று வருகின்றன.**

-இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நேற்றுமுன்தினம் யாழில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போது குற்றஞ்சாட்டினர். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வட மாகாணத்தின் நான்கு பெரிய பாடசாலைகள் உட்பட 11 பாடசாலைகள் சம்பந்தமாக பல்வேறு குற்றச்சாட்டுக் களை நாங்கள் முன்வைத்திருந் தோம். எனினும் இது தொடர்பாக இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை.

தற்போதைய வடமாகாணக் கல்விப் பணிப்பாளரும் இத்தகைய ஊழல் செயற்பாடு களுக்கு உடந்தையாகத் தான் செயற்பட்டு வருகின்றார். வடமாகாண ஆளுநர் புதிதாக கடமைகளைப் பொறுப்பேற்ற போது அவர் சுதந்திரமாகச் செயற்படுகின்ற போக்கை அவதானித்த போதிலும் தற்போது அரசியல் தேவைகளுக்காகக் குற்றவாளிகளை பாதுகாக்கின்ற வகையில் செயற்பட்டு வருகின்றார். இத்தகைய செயற்பாட்டை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம்.

வட மாகாணக் கல்வித்துறையில் இடம்பெறும் ஊழல் மோசடிகள் தொடர்பில் வடமாகாணக் கல்வி அமைச்சு உரிய கவனம் செலுத்த வேண்டும். வட மாகாண ஆளுநர் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். இது சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்தில் வடமாகாணத்தில் கல்வியில் இடம்பெறும் ஊழல் மோசடிகளுக்கு எதிராக இலங்கை ஆசிரியர் சங்கம் பெரும் ஆர்ப்பாட்டத்தை முன்னெ டுக்கும் - என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (எ-27)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 01.03.1939
இறப்பு 31.10.2020

யாழ். மண்கும்பான் 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட

**அமரர் முத்துவேலு தங்கராசா**

ஆண்டு இரண்டு ஆனாலும்
அன்பு முகம் மறக்கவில்லை என்றும் - உம்
நினைவாய் இருந்தே நாம் தவிக்கின்றோம்
தூண்டா மணி விளக்காய் ஒளிவீசி பிரகாசித்தீர்!
இன்று வேண்டித்துதித்தே இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

புகழேந்திநகர்,
மல்லாவி.
074 232 6861

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## மதுபான விற்பனை திடீரென வீழ்ச்சி

மதுபான விற்பனை தற்போது 40 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்துள் ளது என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதனால் மதுவரியால் அரசாங்கம் எதிர் பார்த்துள்ள வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று மதுவரி ஆணையாளர் நாயகம் எம். ஜே. குணசிறி தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நெருக்கடி, பண வீக்கம், எத்தனோல் மற்றும் மூலப்பொருள்களின் விலையேற்றம் காரணமாக இந்த ஆண்டில் 3 தடவைகள் மதுபானங்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன.

இந்த வருடத்தில் மாத்திரம் மதுவரியின் ஊடாக 185 பில்லியன் ரூபா வருமானமாக எதிர் பார்க்கப்பட்டது. கடந்த ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் 40 சத வீதம் மதுபான விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த வருட இறுதியில் 160 பில்லியன் ரூபா வரையிலேயே வருமானமாக ஈட்டமுடியும் என மதுவரி ஆணையாளர் நாயகம் எம். ஜே. குணசிறி குறிப்பிட்டுள்ளார். (எ-இ)


## மரண அறிவித்தல்



**குழந்தைவேல் சுமதி**

மட்டுவில் கிழக்கு, மட்டுவிலை பிறப்பிடமாகவும் இராமநாதன் லேன், கோப்பாய் தெற்கு, கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட குழந்தைவேல் சுமதி நேற்று (07.11.2022) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் காலமானார்.

அன்னார் குழந்தைவேலு (ஓய்வுபெற்ற ஆய்வுகூட உதவியாளர், யாழ். பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மனைவியும், பொன்னையா - காலஞ்சென்ற சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகா - இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும், கபிலன் (உப விடுதிக் காப்பாளர் யாழ். பல்கலைக்கழகம் - கிளிநொச்சி), சர்மிலன் (வேலை உதவியாளர் யாழ். பல்கலைக்கழம்), சுபாங்கி (சுவிஸ்), ஆகியோரின் அன்புத் தாயாரும், சுரேஸ் (சுவிஸ்), ரமேஸ் (லண்டன்), காலஞ்சென்ற சுமன், ஜெயமதி, வளர்மதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிருஸ்ணவதனி (சுவிஸ்), சர்வலோஜினி (லண்டன்), பாலச்சந்திரன், சோமேஸ்வரன் (குட்டி), செல்லி, செல்லையா, இரத்தினேஸ்வரி, பொன்னுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், அக்ஷயா, சயந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருத்திக் இன் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்கு கோண்டாவிலில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CR 7055) (3/6)

தகவல் : குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 13 . 08 . 1948



இறப்பு 07 . 11 . 2022

**அமரர் பொன்னர் பேரின்பநாதன்**

(முன்னாள் அதிபர், கணித பாட ஆசிரிய ஆலோசகர் - யாழ் கல்வி வலயம்)

கோப்பாய் தெற்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் பொன்னர் பேரின்பநாதன் அவர்கள் நேற்று (07.11.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர்-மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா-இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும், அம்பிகாதேவியின் அன்புக்கணவரும், பத்மினி, புனிதகௌரி (ஆசிரியர் - அச்சுவேலி ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், லோகேஸ்வரன் (கணக்காளர் (செலவீனப் பகுதி) - இலங்கை மின்சார சபை யாழ்ப்பாணம்), புவனேந்திரன் (அஞ்சல் உத்தியோகத்தர் - சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், நிலக்ஷன் (மாணவன் - யாழ்.மத்திய கல்லூரி), டுலக்ஷிகா (மாணவி - கோப்பாய் நாவலர் வித்தியாலயம்), சரவணபவா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2022) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.
0770040829


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எல்லாவற்றையும் விட உங்கள்
வாழ்க்கை பெறுமதி மிக்கது
என்பதால்

வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் சவால்களைக் கடந்து எமது அன்புக்குரியவர்களுடன் இவ் வாழ்க்கைப் பயணத்தில் முன்னேறிச் செல்வோம். நாளைய பொழுது பற்றி நமக்கிருக்கும் புதிய எதிர்பார்ப்புகளுடன் எமது எதிர்காலக் கனவுகளை நனவாக்கி, இந்த சவால் மிக்க காலத்தில் நம்பிக்கையோடு வாழக்கூடிய பாதுகாப்பு இப்போது நம் அனைவருக்கும் இருக்கின்றது.

அலியான்ஸ்
திவிதரன
ஆயுள் காப்புறுதி

நம்பிக்கையான நாளைய பொழுதிற்கு.

அலியான்ஸ், உலகின் நம்பர் 1 காப்புறுதி வியாபார நாமம்.

அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடட்
கம்பனி இல. PB 3493
இல. 675, கலாநிதி டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை (பேஸ்லைன் வீதி), கொழும்பு - 09, இலங்கை.
தொலைபேசி : +94 112 317 988/9 மின்னஞ்சல் : customerservice@allianz.lk வலைதளம் : www.allianz.lk



மன்னார் பேசாலை 'விழிகள் கலா முற்றும்' என்ற அமைப்பு பேசாலை பிரதான வீதியை அழகுபடுத்தும் நோக்குடன் மரநடுகைத் திட்டத்தை அண்மையில் முன்னெடுத்தது. மன்னார் தலைமன்னார் பிரதான வீதியான ஏ-14 வீதியில், பேசாலை எல்லைக்குட்பட்ட பகுதியின் இரு பக்கங்களிலும் மரக்கன்றுகள் நடப்பட்டன. (எ-60)

## ஆலயமொன்றில் ஒலிபெருக்கி திருட்டு

யாழ்ப்பாணம், நவ. 8

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி மேற்குப் பகுதியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ பேச்சியம்மாள் ஆலயத்தில் ஒலிபெருக்கி சாதனம் கடந்த சனிக்கிழமை திருடப்பட்டுள்ளது.

இளைஞர்கள் சிலர் ஆலய மடப்பள்ளியின் கதவு திறந்திருந்ததனை அவதானித்து, இந்த விடயத்தை ஆலய நிர்வாகத்தினரின் கவனத்துக்குக் கொண்டு சென்றபோதே இவ்வாறு ஒலிபெருக்கி சாதனம் திருடப்பட்டமை தெரியவந்துள்ளது. இதுதொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ய-27)




சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு, சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்டம் 306 'பி' மற்றும், வடமாகாண லயன்ஸ் கழகங்கள் என்பன இணைந்து நடத்திய நீரிழிவு விழிப்புணர்வு நடைபவனியும் மருத்துவ முகாமும் யாழில் அண்மையில் இடம்பெற்றது. (ய-27)



ஊர்காவற்றுறை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட நாரந்தனை தெற்கு சூரிய காந்தி மற்றும் அன்னை திரேசா தாய்மார் கழகங்களால் கடந்த சனிக்கிழமை போஷாக்கை மையப்படுத்திய கண்காட்சி இடம்பெற்றது. இதில் ஊர்காவற்றுறை பொதுச்சுகாதார மருத்துவ அதிகாரி பரா.நந்தகுமார் சிறப்பு அதிதியாகக் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (ய-125)



ஏழாலை தெற்கு தமிழ்ப் பொதுப்பணிமன்றத்தின் 50ஆவது ஆண்டு நிறைவு விழாவும் அமரர் சபாபதி நாகராசாவின் ஞாபகார்த்த விழாவும் ஏழாலை தெற்கு அ.மி.த.க. பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது கிராமத்துக்காக பணியாற்றியவர்கள் கௌரவிக்கப்பட்டதோடு ஏழாலை கிராமத்தின் உள்ளூர் மற்றும் புலம்பெயர் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (ய-27)



குருநகர் சென். ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் பங்களிப்பில் குருநகர் சென். ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தின் 25ஆவது ஆண்டு நிறைவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நகர் கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ய-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன்–மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைக்கும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். காரியம் நல்லபடி முடியும்.

**மிதுனம்:** சிலருக்கு தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சகோதர வகையில் வீண்செலவுகள் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உறவினர்கள் மூலம் கிடைக்கும் தகவல் மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** தந்தைவழி உறவுகளால் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். புதியமுயற்சிகளைத்தவிர்ப்பதுநல்லது.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்புத் தருவார். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆனால், திடீர் செலவுகளால் கையிருப்பு கரையும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்வது நல்லது.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணை ஆதரவு தருவார்.

**கும்பம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக சில வேலைகளை எடுத்துச் செய்ய வேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்க வேண்டி வரும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துகொள்வது மகிழ்ச்சி தரும்.

5.5 மில். ரூபா செலவில்

## வட்டு.– பொன்னாலை வீதி தற்காலிகமாகச் செப்பனிடல்

யாழ்ப்பாணம், நவ. 8

வட்டுக்கோட்டை - பொன்னாலை பிரதான வீதியின் தற்காலிக புனரமைப்புப் பணிகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



யாழ்ப்பாணம் - பொன்னாலை பருத்தித்துறை வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு யாழ்ப்பாணம் முதல் வட்டுக்கோட்டை சந்தி வரையான வீதி காப்பெற் இடப்பட்டு நிறைவடைந்தது.

வட்டுக்கோட்டை சந்தி முதல் பொன்னாலை வரையான வீதிப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக திட்டம் இடைநிறுத்தப்பட்டது. காரைநகர்- மானிப்பாய் வீதியும் மிகவும் மோசமாக சேதமடைந்து காணப்படுவதால், காரைநகரிலிருந்து பயணம் மேற்கொள்வோர் இந்த வீதியையே அதிகம் பயன்படுத்தி வருகின்றனர். குறித்த வீதியும் மிக மோசமாகச் சேதமடைந்துள்ள நிலையில் புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், மக்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே மேற்படி வீதியைப் பயன்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில் 784 வழித்தட வட்டுக்கோட்டை - பொன்னாலை வீதியின் நிலைமை குறித்து கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் ஊடாக போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தனவின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை பணிப்பாளர் நாயகம் வீரக்கோனிடம் காரைநகர் பிரதேச சபைத் தவிசாளரால் நேரடியாகக் கடிதம் கையளிக்கப்பட்டது.

இதையடுத்தே 5.5 மில்லியன் ரூபா செலவில் தற்போது தற்காலிகமாக வீதி செப்பனிடும் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ச-125)

தடைசெய்யப்பட்ட வலையில் மீன்பிடி

## மன்னார் மீனவர்கள் 24 பேருக்கு பிணை

மன்னார், நவ. 8

நானாட்டான் பிரதேசத்துக்குட்பட்ட அச்சங்குளம் வங்காலைப் பகுதியில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பாவித்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 24 பேர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் அவர்கள் பயன்படுத்திய 4 படகுகள் மற்றும் 3 ஆயிரம் கிலோ மீன்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.


மன்னார்-தாழ்வுப்பாடு பகுதியைச் சேர்ந்த மீனவர்களே இவ்வாறு கைதாகினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைதாகிய மீனவர்களைக் கடற்படையினர் மீன்பிடித் திணைக்களத்தினரிடம் ஒப்படைத்ததையடுத்து அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களைப் பிணையில் விடுவிக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

(ச-213)

## மரண அறிவித்தல்

பிறப்பு
29 - 11 - 1958



இறப்பு
05 - 11 - 2022

### தர்மலிங்கம் தெய்வேந்திரம்

(வேலணை ப.நோ.கூ.ச.முன்னாள் முகாமையாளர்)

மண்கும்பான் மேற்கு 5ஆம் வட்டாரத்தினைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் தெய்வேந்திரம் (வேலணை ப.நோ.கூ.ச. முன்னாள் முகாமையாளர்) அவர்கள் கடந்த (05.11.2022) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கம் சிவக்கொழுந்து தம்பதியரின் பாசமிகு புதல்வனும் குமாரு இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் கேதீஸ்வரியின் அன்புக் கணவரும் கேசிகனின் பாசமிகு தந்தையாரும், மகாலட்சுமி, லீலாவதி (பிரான்ஸ்), குமாரகுலசிங்கம் (லண்டன்), விநாயகமூர்த்தி (லண்டன்), சுதாகரன் (வேலணை ப.நோ.கூ.ச.எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர்) ஆகியோரின் உடன் பிறந்த சகோதரனும் காலஞ்சென்ற பத்மநாதன், சொர்ணலிங்கம் (பிரான்ஸ்), சுலோசனா (லண்டன்), சசிகலா (லண்டன்), விமலகேசினி, சத்தியபாமா (ஆசிரியர்), றஞ்சிதமணி, காலஞ்சென்ற மனோகரன், காலஞ்சென்ற தயாநிதி, காலஞ்சென்ற சுதாகரன், கலாநிதி, அருணாநிதி, உசாநிதி, பாஸ்கரன், சசிகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.11.2022) புதன்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனத்திற்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5ஆம் வட்டாரம்,
மண்கும்பான்,
வேலணை
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்

## நூல் வெளியீடு இன்று

கொடிகாமம், நவ. 8

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் அரசறிவியல் மன்றத்தின், 'அதிகாரம் இதழ் - 1' நூல் வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அரசறிவியல் மன்றத் தலைவர் யோ.அலெக்சன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈ.சரவணபவன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய சமூக விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லதிஸ்கிரேஸ் விக்ரர் ஜெயகுமார், சிரேஷ்ட அரசியல் ஆய்வாளர் சட்டத்தரணி சி.அ.யோதிலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூல் அறிமுகவுரையை அரசறிவியல் மன்ற பொறுப்பாசிரியர் செ.பிரதாப், நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை மூத்த விரிவுரையாளர் சி.ரமணராஜா, நூலின் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக அரசறிவியல்துறை தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

(ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டன் பிரதமரை சந்தித்தார் ரணில்

கொழும்பு, நவ. 8

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக்குக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

எகிப்தின் ஷம் எல் ஷேக்கில் நடைபெற்று வரும் காலநிலை மாற்றம் தொடர்பான கோப் 27 மாநாட்டின் போது இந்தச் சந்திப்பு நடைபெற்றது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

புதிதாகப் பதவியேற்றுள்ள பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக்குக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார். (அ-ஒ,22)

# எதிரணியிலிருந்து 13 எம்.பிக்கள் 'பல்டி'?

கொழும்பு, நவ. 8

ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிரணி பக்கம் உள்ள 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணையவுள்ளனர் என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதற்காகவே இவர்கள் 'பல்டி' அடிக்கின்றனர் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் சிலருக்கு அமைச்சுப் பதவியும் வழங்கப்படவுள்ளது.

வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்ட பின்னர், அதற்கு ஆதரவு என்ற போர்வையில் தாவலை அரங்கேற்றுவதற்கான ஏற்பாடுகள் வெற்றியளித்துள்ளன எனத் தெரியவருகின்றது.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் ஆளுங்கட்சி பக்கம் செல்லமாட்டார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறிவித்துள்ளார். (அ-ஒ,44)

# குழந்தை உயிரிழப்பு: காரணத்தை கண்டறிய குருதிமாதிரி கொழும்புக்கு

யாழ்ப்பாணம், நவ. 8

வீட்டில் உயிரிழந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்ட 9 மாத ஆண் குழந்தையின் இறப்புக்கான காரணம் உடற்கூற்றுப் பரிசோதனையில் கண்டறியப்படாமையால் குருதி மாதிரிகள் இரசாயனப் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தும்பளை கிழக்கு, பருத்தித்துறையைச் சேர்ந்த ரவீதன் சபரீசன் என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது. நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை குழந்தை அசைவற்று காணப்பட்டதையடுத்து உடனடியாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போது குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டது. உயிரிழப்புத் தொடர்பில் நேற்று திங்கட்கிழமை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி திருமதி அஞ்சலா வின்சன்தயான் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார். உடற்கூற்றுப் பரிசோதனையில் உயிரிழப்புக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் குருதி மாதிரிகள் இரசாயனப் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (அ-ஒ,26)

## *உயிரிழந்தவர்களை...*

அதற்காக மாவீரர் துயிலும் இல்லங்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படுகின்றன. இதன்போது பாதுகாப்புத் தரப்பினரின் கெடுபிடிகள், மாவீரர் நாளை கடைப்பிடித்தால் சட்ட நடவடிக்கை என்ற பொலிஸாரின் மிரட்டல்கள் தொடர்பில் நீதி அமைச்சரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'நினைவேந்தல் நிகழ்வுகளில் அரசியல்வாதிகள் தங்கள் செல்வாக்கைச் செலுத்துவதை நிறுத்த வேண்டும். மக்கள் தமது உறவுகளைச் சுதந்திரமாக நினைவேந்த அவர்கள் இடமளித்து விலகி நிற்க வேண்டும். ஆனால், நாட்டில் தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பின் பெயரைப் பயன்படுத்தி எவரும் நினைவேந்தல்களைப் பகிரங்கமாகச் செய்ய முடியாது.

பாதுகாப்புத் தரப்பினரை ஆத்திரமூட்டும் வகையில் எவரும் நடக்கக்கூடாது' என்று நீதி அமைச்சர் குறிப்பிட்டார். (அ-ஒ,22)

## *306 தமிழர்களுடன்...*

முயற்சிகளை இலங்கை நேரப்படி நேற்றிரவு மேற்கொண்டனர். அதனைத் தொடர்ந்து அவர்கள் வியட்நாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைத் தமிழர்கள், மியான்மரில் இருந்து கப்பலில் கனடாவுக்கு 3 வாரங்களுக்கு முன்னர் இந்தப் படகில் புறப்பட்டுள்ளனர். 30 க்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 306 பேருடன் இந்தப்படகு புறப்பட்டுள்ளது. எந்தவித பாதுகாப்பு ஏற்பாடுகளுமின்றி இவர்கள் முகவர் ஊடாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் நேற்று அதிகாலை பிலிப்பைன்ஸ் கடற்பரப்பில் சிறு பாறையுடன் மோதியதில் படகு தொடர்ந்து பயணத்தை மேற்கொள்ள முடியவில்லை. ஒரு கட்டத்தில் படகு மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன்போது படகோட்டிகளுக்கும் அங்கிருந்த அகதிகளுக்கும் இடையே வாய் தர்க்கம் ஏற்பட்ட காரணத்தால் அகதிகளை கடலில் தவிக்க விட்டு படகோட்டிகள் தப்பிச்சென்றுள்ளார்கள்.

பின்னர் புலம்பெயர் தமிழர்களுடன் படகில் இருந்தோரிடம் தொடர்புகளை மேற்கொண்டு தம்மைக் காப்பாற்றுமாறு கோரினர். அதனடிப்படையில் அனைத்து நாடுகளுக்கும் வேகமாக தகவல் பகிரப்பட்டு அகதிகளை காப்பாற்றுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனையடுத்தே அவர்களை பிலிப்பைன்ஸ் கடற்படை மீட்டது. படகில் உள்ள அகதிகளில் 80 வீதமானவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பலர் குடும்பத்தினருடனும் சென்றுள்ளார்கள் எனவும் தெரியவருகிறது. (அ-ஒ,7)

## *எதிர்வரும்....*

வரையிலான காலப் பகுதியில் தொடர்ச்சியாக கூடிய மழைவீழ்ச்சி பதிவாகும்.

தாழமுக்கமானது இலங்கையின் வட பகுதிக்கும் இந்தியாவின் நாகப்பட்டினத்துக்கும் இடைப்பட்ட பகுதியூடாக கடக்கும். புயலாக இருந்தாலும் சரி அல்லது தாழமுக்கமாக இருந்தாலும் சரி இப்பகுதியூடாகவே கடப்பதற்கான சாத்தியகூறுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. சரியான பாதையை நாளை உறுதிப்படுத்தி கூறக் கூடியதாக இருக்கும். பெரும்பாலும் இது ஒரு புயலாக இருக்கும் அல்லது ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு மண்டலமாக காணப்படும்-என்றார். (அ-ஒ,125)

## *போதையைக்....*

கள் அமைக்கப்பட்டு வீதியால் பயணிப்போர் சோதனையிடப்படவுள்ளனர் என்று யாழ்ப்பாண இராணுவ கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜய சுந்தர தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ள நிலையில் மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து விற்பனை இடம்பெறுகின்றது. இது தொடர்பில் நீதி அமைச்சர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநரால் உயிர்கொல்லி போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் முகமாக யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் அண்மையில் இடம்பெற்றிருந்தது.

வடக்கு மாகாண ஆளுநரின் பரிந்துரைக்கு அமைய இன்று முதல் யாழ்ப்பாணத்தின் முக்கியமான இடங்களில் இராணுவத்தினரால் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டு உயிர்கொல்லி போதைப்பொருள் விநியோகம் மற்றும் பயன்படுத்துவோர் கைது செய்யப்படஉள்ளதாகவும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

மேலும் உயிர்கொல்லி போதைப்பொருள் விற்பனை செய்வோர் மற்றும் பயன்படுத்துவோர் தொடர்பில் ஏதாவது தகவல்கள் தெரிந்தால் பொதுமக்கள் அருகில் உள்ள இராணுவ முகாமில் தெரிவித்தால், குறித்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை கைது செய்ய உதவியாக இருக்கும் என்று குறிப்பிட்டார். இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படவுள்ள சோதனை நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (அ-ஒ,26)

## *வலி.வடக்கு...*

சபை தலைமை அலுவலகத்தில் நேற்று மாலை சந்தித்தனர். இதன்போது காணி ஆக்கிரமிப்புத் தொடர்பான ஆவணங்களையும் தவிசாளரிடமிருந்து பெற்றுக் கொண்டனர். சந்திப்புத் தொடர்பில் தவிசாளர் சுகிர்தன் தெரிவித்ததாவது,

வடக்கில் பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள காணிகள் தொடர்பில் கேட்டறிந்தனர். குறிப்பாக வலி. வடக்கு நிலைமைகள் தொடர்பில் பல தகவல்களை சேகரித்துக்கொண்டனர். மயிலிட்டியில் 150 ஏக்கர் காணியை இராணுவம் விடுவித்தாக அறிவித்தபோதும் மக்களிடம் கையளிக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினேன். பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள பாடசாலைகள், ஆலயங்கள் தொடர்பான விவரங்களையும் பெற்றுக்கொண்டனர். பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள காணிகளில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுதல், சுற்றுலா மற்றும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பிலும் சுட்டிக்காட்டினேன். கடற்படையினர் காணிகளை சுவீகரித் துள்ளமை தொடர்பில் தெரிவித்தபோது, கடற்படையினருக்கு தரையில் இவ்வளவு காணிகள் எதற்கு ? என்று கேள்வி எழுப்பினர்- என்றார் தவிசாளர் சுகிர்தன். (அ-ஒ,26)

## *53 வயதானவரை...*

வேலி பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர். அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 15 வயதுச் சிறுமியை அழைத்துச் சென்று குடும்பம் நடத்தியதாக பிரான்ஸிலிருந்து வந்த கல்வியன்காட்டைச் சேர்ந்த 20 வயது இளைஞன் கடந்த மாதம் 27ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தான். சிறுமி மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது சிறுமி துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படவில்லை என்பது தெரியவந்தது. இதேவேளை- சிறுமியிடம், சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தினர், பொலிஸார் உட்பட பல தரப்பினரும் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

நெதர்லாந்திலுள்ள 53 வயதான ஒருவருக்கு தன்னை திருமணம் செய்து வைக்க பெற்றோர் முயல்கின்றனர் என இதன்போது சிறுமி குறிப்பிட்டுள்ளார். அவருடன் 'வீடியோ' அழைப்பு மூலம் உரையாட நிர்ப்பந்திப்பதாகவும் தனது வாக்குமூலத்தில் சிறுமி தெரிவித்துள்ளார். அத்துடன் தன்னை நிர்வாணமாக அவருடன் 'வீடியோ' அழைப்பில் பேசுவதற்கு பெற்றோர் அழுத்தம் கொடுத்தனர் எனவும் கூறியுள்ளார். இதனையடுத்து அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். சிறுமி பேர்த்தியாரின் பராமரிப்பில் தற்காலிகமாக ஒப்படைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் சிறுமியை தாக்கிய குற்றச்சாட்டில் அவரது பெற்றோரை நேற்றுக் கைது செய்துள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். இன்றைய தினம் அவர்களை நீதிமன்றில் முற்படுத்தவுள்ள தாகவும் குறிப்பிட்டனர். (அ-ஒ,5,26,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*யாழ்.மருத்துவமனை...*

வேளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு முன்பாகவுள்ள வீதியூடாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளோ, தனியார் பேருந்துகளோ பயணிக்க இன்று முதல் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவிப்பை யாழ். மாநகர மேயர் வி.மணிவண்ணன் விடுத்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் முன்பக்க வீதியில் போக்குவரத்து நெரிசல் காணப்படுகின்றது. அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் சகல பேருந்துகளும் மாற்று வழியில் பயணிக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து தரிப்பிடத்திலிருந்து புறப்படும் பேருந்துகள் சத்திரச்சந்தி ஊடாகவே வெளியேற முடியும். மருத்துவமனை வீதி ஊடாகப் பயணிக்க முடியாது. அதேபோன்று எந்தவொரு மார்க்கத்தின் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு வரும் தனியார் பேருந்துகளும் மருத்துவமனையின் முன்வீதி ஊடாகப் பயணிக்க முடியாது.
இவற்றை மீறிச் செயற்படும் பேருந்துகளுக்கு எதிராக பொலிஸார் சட்டநடவடிக்கைகள் எடுப்பார்கள்- என்றார். (அ-ஓ.-26)

*காணொலி...*

இளைஞன், ஊர்மக்களால் நையப்புடைக்கப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளான்.
இளைஞன் காணொலி எடுப்பதை குளித்துக்கொண்டிருந்த சிறுமி எதேச்சையாகக் கண்டுள்ளார். அவர் அலறிய சத்தம் கேட்டு அயலவர்கள் அங்கு வந்தனர். காணொலி எடுத்த இளைஞனை மடக்கிப்பிடித்து 'முறையாகக் கவனித்தனர்'. அதன்பின்னர் அவனை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.
வட்டுக்கோட்டை அராலியைச் சேர்ந்த இளைஞனே இவ்வாறு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளான். (அ-ஒ-125)

*23 வயது பெண்ணைக்....*

தான பெண்ணைக் கடத்த முயன்றதாகத் தெரிவிக்கப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் மூன்றுபேர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கடந்த 5ஆம் திகதி இந்தக் கடத்தல் முயற்சி இடம்பெற்றதாக முல்லைத்தீவுப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
காதல் விவகாரமே இதற்குக் காரணம் என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.
23 வயதான பெண்ணுக்கு சில மாதங்களுக்கு முன்னர் திருமணம் இடம்பெற்றது. சிறிது காலத்தினுள் குடும்பத்தினுள் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. தனது மனைவிக்கு, அவரது நெருங்கிய உறவினரான 63 வயது நபருடன் காதல் இருப்பதாகத் தெரிவித்து கணவன் ,பொலிஸில் கடந்த மாதம் முறைப்பாடு செய்திருந்தார்.
63 வயது நபர் கனடாவில் வசித்து வந்த நிலையில் அண்மையில் முல்லைத்தீவுக்கு திரும்பி அங்கு வாழ்ந்து வருகின்றார். அவருடன் இணைந்து வாழ விரும்புவதாகவே 23 வயது பெண், பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார்.
பொலிஸார் 23 வயது பெண்ணுக்கு அறிவுரை கூறி, பெண்ணை அவரின் பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளனர். பெற்றோரின் வீட்டில் கடந்த ஒரு மாதமாக அந்தப் பெண் தங்க வைக்கப்பட்டுள்ளார்.
இந்த நிலையில், கடந்த 5ஆம் திகதி இரவு 23 வயதுப் பெண்ணைக் கடத்திச் செல்ல வந்ததாகத் தெரிவித்து வாகனமொன்றை சேதமாக்கிய பெண்ணின் உறவினர்கள், வாகனச் சாரதியையும் தாக்கியுள்ளனர்.
தாக்குதலுக்கு உள்ளான வாகனச் சாரதியும், தாக்குதல் நடத்திய பெண்ணின் சகோதரர்கள் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்ட போது, அவர்களை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-ஒ-19)

# 786 வழித்தட காலைநேர பஸ்சேவை ஒழுங்கில்லை

## வட்டு. மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், நவ. 8
யாழ்ப்பாணம் - காரைநகர் 786 வழித்தட காலைநேர இ.போ.ச. பஸ்சேவை ஒழுங்கின்றி காணப்படுகின்றது என்றும் பெரும்பாலும் இந்தச் சேவை இடம்பெறுவதில்லை என்றும் வட்டுக்கோட்டை மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
அவர்கள் மேலும் தெரிவிக்கையில் குறித்த பஸ் சேவை காலை 5 மணிக்கு காரைநகரிலிருந்து புறப்பட்டு எமது இடத்துக்கு 5.35 - 5.40 மணிக்கு வருகை தருவது வழமை.
தற்போது இந்த பஸ் சேவை ஒழுங்கின்றிக் காணப்படுவதுடன் பெரும்பாலும் இந்த சேவை இடம்பெறுவதில்லை.
வட்டுக்கோட்டை மக்கள் இந்த பஸ் சேவையை நம்பியிருக்க வேண்டிய நிலைமை காணப்படுகிறது. அந்தப் பேருந்து வராதுவிட்டால் சித்தன்கேணி அல்லது வட்டுக்கோட்டை சந்திகளுக்கு சென்று தாமதமாகவே பயணம் மேற்கொள்ள வேண்டியேற்படுகின்றது.
அரச, தனியார் ஊழியர்கள், நோயாளர்கள், மக்கள் எனப் பலரும் இதனால் நெருக்கடிகளுக்குள்ளாகின்றனர். இது தொடர்பில் இ.போ.ச. சபையிடம் கேட்டால் சாரதி, நடத்துநர்கள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.
ஆகவே இந்தச் சேவை இடம்பெறாவிடின் அந்த நேரத்துக்கு தனியார் பேருந்து சேவையாவது இடம்பெற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வழிவகுக்க வேண்டும்- என்றனர். (ச)

# எரிபொருளுக்கு மீண்டும் வரிசை

கொழும்பு, நவ. 8
இந்த வாரம் எரிபொருள் விலை திருத்தப்படும் என்ற எதிர்பார்ப்பில் எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் முன்பதிவு நடவடிக்கையில் இருந்து விலகியுள்ளமையால் கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் எரிபொருளுக்காக வரிசை உருவாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
எனினும் எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் வழமைபோன்று முன்பதிவு நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளனர் என்று இலங்கை தனியார் தாங்கி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
இதன்படி, எதிர்வரும் நாள்களில் எரிபொருள் வரிசை குறைவடையும் எனவும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள் ளது.
இதேவேளை- தற்போது முச்சக்கரவண்டிகளுக்கு வழங்கப்படும் 5 லீற்றர் பெற்றோல் ஒதுக்கத்தை 10 லீற்றராக அதிகரிப்பதற்கு அண்மையில் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான பதிவு நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-14-இ)


அமெரிக்க லொத்தர் இலவச விசா
இன்றுடன் பதிவுகள் அனைத்தும் நிறைவடைகின்றன
ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்
Passport அவசியமில்லை
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புகள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்
V2 Travels
இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்காவில் குடும்பத்துடன் வசிக்கின்றார்கள்
0768226244

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு.**

- நல்ல தண்ணீரூற்றுச் சூழல்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
- வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்:-**

- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை.

**தொடர்பு:- ஜெயம்**
**077 814 7389**
**077 986 5457**

**SAM LANKA**
DIRECT IMPORTERS & DISTRIBUTORS
NO:- 367 NAVALAR ROAD, ILLUPPAIYADY JUNCTION, JAFFNA
021 222 1002, 0094 777 46 58 48, 0094 778 20 94 24
SAM LANKA
25% OFF
VALID TILL 30th NOVEMBER 2022
KEVILTON Power to Innovate
SWITCHES, ISOLATOR, RCCB, BREAKERS LED LIGHTS LED PANEL LIGHTS
ORANGE ELECTRIC
SWITCHES, ISOLATOR, RCCB, BREAKERS LED LIGHTS LED PANEL LIGHTS
Wireman
ALL KINDS OF LED LIGHTS
Panasonic
ALL KINDS OF LED LIGHTS
AKRA
ALL KINDS OF LED LIGHTS

# நாமலின் பதவிக்காக ரணிலுடன் மோதுவதற்குத் தயாராகும் மஹிந்த

கொழும்பு, நவ. 8
மக்களின் அதிருப்திக்கு உள்ளாகி இருக்கும் பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ச, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட குழு வினருக்கு அமைச்சரவை மாற்றத்தின்போது அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்காக வரவு - செலவுத் திட்டத்துக்கு முன்னர் தீர்மான அழுத்தங்களைக் கொடுப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்கவுள்ளார் என்று கூறப்படுகின்றது.
ஜனாதிபதி எகிப்து பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும் உடனடியாக இந்தச் சந்திப்பு நடக்கும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. அதேவேளை, அழுத்தங்களுக்கு அடி பணிந்து வரவு - செலவுத் திட்டத்துக்கு முன்னர் அமைச்சரவை மாற்றத்தை மேற்கொள்வதில்லை என்பது ஜனாதிபதியின் நிலைப்பாடாக உள்ளது என்று அறியமுடிகின்றது.
பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகளுக்காக 12 பேர் அடங்கிய பட்டியலை ஜனாதிபதியிடம் வழங்கியிருந்தார். அந்த பட்டியலில் நாமல் ராஜபக்ச, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்த்தன, சனத் நிஷாந்த போன்றோரின் பெயர்கள் இருந்தன.
இந்த நிலையில், பட்டியலில் உள்ளவர்களில் மக்கள் அதிருப்திக்கு உள்ளாகி இருக்கும் நாமல் ராஜபக்ச, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்ட குழுவினரை தவிர ஏனையோருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கவேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் குழுவொன்று ஜனாதிபதியிடம் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வருகின்றது. இந்த நெருக்கடியை தீர்க்கவே, ஜனாதிபதியின் எகிப்து பயணத்தின் பின்னர், வரவு - செலவுத்திட்டத்துக்கு முன்னர் மஹிந்த ராஜபக்சவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் விசேட சந்திப்பு நடைபெறவுள்ளது என்று தெரியவருகின்றது. (எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.